ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1827/5 - 2013 සැප්තැම්බර් මස 09 වැනි සඳුදා - 2013.09.09

*1827/5 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

முத்திரை

மஹிந்த ராஜபக்ஷ

**சனாதிபதி பணிப்புரை**

1. பேராசிரியர் ஹித்தனாதுர ஜானக டி சில்வா அவர்கள்
2. பேராசிரியர் காமினி நிர்மலா மெண்டிஸ் அவர்கள்
3. பேராசிரியர் ஆனந்த ராஜித்த விக்கிரமசிங்க அவர்கள்
4. பேராசிரியர் ஹேமா மாலினி கும்பல்கொட கங்கானம் பத்திரன அவர்கள்
5. பேராசிரியர் ஹேமந்தி ரணசிங்க அவர்கள்
6. பேராசிரியர் விஜேரூபகே சந்தியா சுலோசனா விஜேசுந்தர அவர்கள்
7. பேராசிரியர் லக்ஷ்மன் லொயிட் ரத்நாயக்க அவர்கள்
8. பேராசிரியர் அவுரெலியா ஜெனிபர் பெரேரா அவர்கள்
9. பேராசிரியர் தெல்கஹவத்தகே ராஜ்குமார் சோமதேவ தெல்கஹவத்த அவர்கள்
10. பேராசிரியர் விரஞ்ஜித் பிரியான் சொலமன் டயஸ் அவர்கள்
11. பேராசிரியர் கதிர்காமநாதன் கந்தசாமி அவர்கள்
12. பேராசிரியர் அருணி திலகரத்ன அவர்கள்
13. கலாநிதி நந்த அமரசேக்கர அவர்கள்
14. கலாநிதி ரோஹான் பிரசன்ன பெரேரா அவர்கள்
15. கலாநிதி கல்பட ஆரச்சிகே சிரிமல் பிரேமகுமார அவர்கள்
16. கலாநிதி நிஹால் ஜினசேன அவர்கள்
17. மொக்செவி பிரேலிஸ் அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள்!

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதிய சனாதிபதி பணிப்புரையினால் தேசிய ஆராய்ச்சிச் சபை தாபிக்கப்பட்டதாதலாலும்,



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அத்துடன், சொல்லப்பட்ட சபை அகல்விரிவான பிரதிநிதித்துவமொன்றைக் கொண்டிருக்கவேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளதாதலால், தற்போது தொழிற்பாட்டிலுள்ள சபையின் உறுப்பினர் சபையின் பதவி வகித்தலை முடிவுறுத்தி, அதற்குப் பதிலாக புதிய உள்ளடக்கமொன்றுடன் கூடிய உறுப்பினர் சபையொன்றை நியமிக்கக் கருதுகின்றேன்.

ஆகவே, இப்பொழுது அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், உங்கள் விவேகம், திறமை, நேர்மை என்பனவற்றின்மீது மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும்கொண்டு, இதன்மூலம் சொல்லப்பட்ட,

1. பேராசிரியர் ஹித்தனாதுர ஜானக டி சில்வா அவர்கள்
2. பேராசிரியர் காமினி நிர்மலா மெண்டிஸ் அவர்கள்
3. பேராசிரியர் ஆனந்த ராஜித்த விக்கிரமசிங்க அவர்கள்
4. பேராசிரியர் ஹேமா மாலினி கும்பல்கொட கங்கானம் பத்திரன அவர்கள்
5. பேராசிரியர் ஹேமந்தி ரணசிங்க அவர்கள்
6. பேராசிரியர் விஜேருபகே சந்தியா சுலோசனா விஜேசுந்தர அவர்கள்
7. பேராசிரியர் லக்ஷ்மன் லொயிட் ரத்நாயக்க அவர்கள்
8. பேராசிரியர் அவுரெலியா ஜெனிபர் பெரேரா அவர்கள்
9. பேராசிரியர் தெல்கஹவத்தகே ராஜ்குமார் சோமதேவ தெல்கஹவத்த அவர்கள்
10. பேராசிரியர் விரஞ்ஜித் பிரியான் சொலமன் டயஸ் அவர்கள்
11. பேராசிரியர் கதிர்காமநாதன் கந்தசாமி அவர்கள்
12. பேராசிரியர் அருணி திலகரத்ன அவர்கள்
13. கலாநிதி நந்த அமரசேக்கர அவர்கள்
14. கலாநிதி ரோஹான் பிரசன்ன பெரேரா அவர்கள்
15. கலாநிதி கல்பட ஆரச்சிகே சிரிமல் பிரேமகுமார அவர்கள்
16. கலாநிதி நிஹால் ஜினசேன அவர்கள்
17. மொக்செவி பிரேலிஸ் அவர்கள்

ஆகிய உங்களை மேற்சொன்ன சனாதிபதி பணிப்புரையின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய ஆராய்ச்சி சபையின் உறுப்பினர்களாக இருக்கவென நான் இத்தால் நியமிப்பதுடன், மேற்சொன்ன தொடக்க பணிப்புரையின் (i) தொடக்கம் (iii) வரையான கருமங்களைச் செயலுருப்படுத்தும் பொருட்டு அவசியமானவாறான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் உங்களை இத்தால் நான் பணிக்கின்றேன்.

அத்துடன், சொல்லப்பட்ட பேராசிரியர் ஹித்தனாதுர ஜானக டி சில்வா அவர்களை தேசிய ஆராய்ச்சி சபையின் தவிசாளராக நியமிக்கின்றேன்.

அத்துடன், இதன்மூலம் ஒப்படைக்கப்படும் கருமங்களை நிறைவேற்றுவது தொடர்பில் அவசியமானவாறான விசாரணைகளை நடாத்துவதற்கும் விடயங்களைப் புலனாய்வு செய்வதற்குமான பணிப்புரைகளை வழங்க தேசிய ஆராய்ச்சி சபைக்கு இத்தால் நான் தத்துவமளிக்கின்றேன்.

அத்துடன், தேசிய ஆராய்ச்சி சபையினால் ஆலோசனைகள் வழங்கப்படும் அல்லது உதவி அல்லது தகவல் கோரப்படும் அரசாங்க அலுவலர்கள் அல்லது பிற ஆட்களுக்கு அத்தகைய சகல ஆலோசனைகளையும் பின்பற்றியொழுகுமாறும் உரியவாறு வழங்கப்படக்கூடிய உதவிகளையும் தகவல்களையும் வழங்குமாறும் இத்தால் பணிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலச்சினையின்கீழ், இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் நாளாகிய இன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

09-1013

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.